# மெட்ரோ ரெயில் நிலையங்களில் கொரோனா விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள்

## 7-ந் தேதி முதல் ஜனவரி 3-ந் தேதி வரை நடக்கிறது

சென்னை, நவ. 5-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இணை இயக்குனர் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரெயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

வருகிற 7-ந் தேதி மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை விமான நிலைய மெட்ரோ ரெயிலிலும், 8-ந் தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 21-ந் தேதி மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை மீனம்பாக்கம் மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 22-ந் தேதி காலை 10 மணிமுதல் 11 மணி வரை உயர்நீதிமன்ற மெட்ரோ ரெயில் நிலையத்தில் நடைபெறுகிறது.

### டிசம்பர் மாதம்

மேலும் அடுத்த மாதம் (டிசம்பர்) 6-ந் தேதி மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 14-ந் தேதி காலை 10 மணி முதல் 11 மணி வரை கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 21-ந் தேதி மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 25-ந் தேதி மதியம் 12 மணி முதல் 1 மணி வரை வண்ணாரப் பேட்டை மெட்ரோ நிலையத்திலும், 27-ந் தேதி மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்திலும் வரை திருமங்கலம் மெட்ரோ நிலையத்திலும் நிமிர்வு கலையகம் குழுவினர் நடத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.